# மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கலாம்

**திருவாரூர், செப்.14:** மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ- மாணவிகள் கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம் என திருவாரூர் மாவட்ட ஆட்சியர் வ. மோகனச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களில் உள்ள மத்திய அரசு கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில்,பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த, மாணவ- மாணவிகளின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.50 லட்சத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

தகுதியுள்ள மாணவ- மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகையாக கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் மற்றும் இதர கட்டாயக் கட்டணம் ஆகிய கட்டணங்களுக்காக மாணவர்களால் செலுத்திய தொகை அல்லது ஆண்டுக்கு அதிகபட்சம் ரூ.2 லட்சம் வரை கல்வி உதவித்தொகை வழங்குவதற்கு தமிழக அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

இந்த கல்வி உதவித்தொகைக்கு, 2025-2026 ஆம் கல்வியாண்டில் புதிய மற்றும் புதுப்பிப்பதற்காக, விண்ணப்பிக்க விரும்பும் தகுதியான மாணவர்கள், சென்னையில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம் அல்லது திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை அணுகி விண்ணப்பங்களை பெறலாம். மேலும், **bcmbcmw.tn.gov.in** என்ற இணையதள முகவரியிலும் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மத்திய மற்றும் மாநில அரசின் இதர கல்வி உதவித்தொகைத் திட்டங்களின் கீழ் பயன்பெறும் மாணவர்கள், இக்கல்வி உதவித்தொகை பெற இயலாது.

மேலும், 2025-26 ஆம் நிதியாண்டிற்கான புதியது மற்றும் புதுப்பித்தல் கல்வி உதவித்தொகை விண்ணப்பத்தை, பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

கல்வி நிறுவனங்கள், தங்களது சான்றொப்பத்துடன் தகுதியான விண்ணப்பத்தை பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு இனத்தவருக்கானதை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு இனத்தவருக்கானதை, மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கும் பரிந்துரை செய்து,

ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம், எழிலகம் இணைப்புக் கட்டடம், 2 ஆவது தளம், சேப்பாக்கம், சென்னை-5, தொலைபேசி எண் 044-29515942 (**tngovtiitscholarship@gmail.com**), ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம், எழிலகம் இணைப்பு கட்டடம், 2-வது தளம், சேப்பாக்கம், சென்னை-5, தொலைபேசி எண் 9445477817 (**mbcdnciitscholarship@gmail.com**) ஆகிய முகவரிகளுக்கு, பூர்த்தி செய்த புதுப்பித்தல் விண்ணப்பங்களை செப்.30 ஆம் தேதிக்குள்ளும், புதிய விண்ணப்பங்களை அக். 31 ஆம் தேதிக்குள்ளும் அனுப்பி வைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.